1972 நவம்பர் 13]

(4) நசியனூர்.
(5) கருமாண்டி செல்லிபாளையம்.
(6) பெருந்துறை.
(7) துடுபட்டி.
(8) சுல்லிபாளையம்.
(9) சீனுபுரம்.
(10) முகசிபிடாரியூர்.
(11) ஒட்டப்பாறை.
(12) அம்மாபாளையம்.
(13) சென்னிமலை.

(உ) இத்திட்டத்திற்கு அரசு வழங்கியுள்ள நிதியும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து வாங்கிய உதவியும் ஊராட்சி மன்றங்களுக்கு கடனாக வழங்கப்படும்.

Tamil Nadu Police Benevolent Fund

* 266 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state the total amount of (1) donations given by the Gazetted Officers; and (2) voluntary subscriptions by the non-Gazetted Officers of the Police Department to the Tamil Nadu Police Benevolent Fund during 1971–72?

தமிழ் நாடு காவலர் நல நிதி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971–72-ம் ஆண்டில் தமிழ்நாடு காவலர் நல நிதிக்குக் காவல் துறையைச் சேர்ந்த (1) அரசிதழ் பதிவுள்ள அதிகாரிகள் நன்கொடையாகவும் (2) என்.ஜி.ஓ.வினர் தாமே முன்வந்து உதவித் தொகையாகவும் அளித்த மொத்தத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1971–72-ம் ஆண்டிற்காக வசூலிக்கப்பட்ட தொகை பின்வருமாறு :—

	ரூபாய்
அரசிதழ் பதிவுள்ள அதிகாரிகள் வழங்கிய நன்கொடை	424.15
என்.ஜி.ஓ.க்கள், தாமே முன்வந்து வழங்கிய சந்தாத் தொகை	57,371.14

[1972 நவம்பர் 13

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : இந்தத் தொகை என்ன நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி : காவலர் குடியிருப்புகளில் கட்டடங்கள், செய்தித்தாள்கள், வார, மாதத் தாள்கள் வாங்க மானியம் கொடுத்தல் ; காவலர்களுடைய குழந்தைகளின் படிப்பிற்கு உதவித் தொகை அளித்தல், காவல் துறையில் பணிபுரிந்து இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளித்தல்; நீண்டநாள் நோய், உயிருக்கு ஆபத்தான காயம் போன்ற நிலைமைகளில் உதவி அளித்தல் ; திடீர் மரணமடைந்தவர்களுக்கு ஈமச் சடங்குகளுக்கு நிதி உதவி அளித்தல் ; மத்தியக் குழு தகுதியானது என்று முடிவு செய்கிற பொது நலன்களுக்கும் ஏனைய காரியங்களுக்கும் நிதி உதவி செய்தல்.

THIRU D. SANTOSHAM : Sir, apart from these collections made from Gazetted Police Officers and non-Gazetted Police Officers, may I know whether any collection has been made from the public for this Police Benevolent Fund?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றித் தகவல் இல்லை.

Island Grounds

* 267. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether Hon. the Chief Minister has received any communication from the Hon. Union Minister for Defence about the construction of buildings on the Island Grounds during May 1972; and

(b) if so, the details thereof?

தீவுத் திடல்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தீவுத் திடலில் கட்டிடம் கட்டுவது பற்றி 1972 மே திங்களில் மத்தியப் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து மாண்புமிகு முதலமைச்சருக்குக் கடிதம் ஏதேனும் கிடைத்துள்ளதா ?

(இ) ஆமெனில் அதுபற்றிய விவரங்கள் யாவை ?